1978 செப்டம்பர் 13]

(ஏ) கல்லணை கிளிக்கூண்டில் நீர்க்கசிவு

திரு. கோ. இளங்கோவன் : பேரவைத் தலைவரவர்களே, ''காவேரி ஆற்றில் கல்லணைக்கு அருகில் உள்ள கிளிக்கூண்டில் நீர் கசிவதைத் தடுக்க'' என்ற அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மை மற்றும் நீர்ப் பாசனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்பமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, கிளிக்கூடு வெள்ள உடைப்பில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கரை எந்தவித ஆபத்துமின்றி நல்லமுறையில் உள்ளது. இம் மாதிரியாக அமைக்கப்பட்டுள்ள பெரிய மண் கரைகளின் பின் புறம் தண்ணீர் கசிந்து வருவது இயற்கையே ஆகும். கரை களின் முன் பக்கம் உள்ள தண்ணீரினுல் மண் கரைகள் ஊறி விடுகின்றன. இம்மாதிரியாக ஊறி கரையின் உள்பக்கம் வரு கின்ற தண்ணீர், கரையில் விசேஷமாக அமைக்கப்பட்டுள்ள வடிகால் அமைப்புகள் (filtering media) வழியாக வடிந்து மண் கரையின் பின்புறம் சுத்தமான தண்ணீராக வெள்வருகிறது. இம்மாதிரியாக கசிந்து வெளிவரும் தண்ணீரில் மண்ணும் கலந்த களிமண் நிறத்தில் வெளி வந்தால்தான் அச்சப்பட வேண்டும். ஆனுல் கிளிக்கூடு உடைப்பை அடைத்திருக்கும் மண் கரையிலிருந்து கசிந்து வரும் தண்ணீர் சுத்தமான தண்ணீராகத் தான் வருகிறது.

திரு. கோ. இளங்கோவன் : தலைவரவர்களே, இந்த கிளிக் கூண்டில் அணை சரியாக இருந்தாலும், தஞ்சை மாவட்டம் பாதிக்கப் படுகிறது; உடைந்தாலும் தஞ்சை மாவட்டம் பாதிக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதற்குக் காரணம் அதன் மேற்கே அமைந் துள்ள ரோட் டாம் சரியாக அமைக்கப்படவில்லை. அந்த ரோட் டாம் சரிவர செயல்படவில்லை என்றுல் அந்த நிலைமை ஏற்படு கிறது. ஆகவே, அதைச் சரியாக அமைக்க மணல்கரைகள் அமைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர் களே, கடந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தால் கிளிக்கூண்டு பகுதியில் ஏற்பட்ட உடைப்பு அடைக்கப்பட்டு மணல் கரைகள் போடப்பட்டு இருக்கின்றன. அந்த மணல் கரையில் இருந்து நீர் கசிவு ஏற்படுகிறது என்று சொல்கிருர்கள். கசிந்து வெளி வரும் தண்ணீர் மண்ணும் கலந்த களிமண் நிறத்தில் இருக்கு மானுல் அச்சப்பட வேண்டும். ஆனுல் அப்படி இல்லை. கசிந்து வரும் தண்ணீர் சுத்தமான தண்ணீராகத்தான் இருக்கிறது. இப்போது இருக்கும் மணல் கரைகள் நன்ருகத்தான் இருக் கின்றன. எந்தவிதமான பாதிப்பும் ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கூ. ச. முருகேசன்: மாண்புமிகு தலைவரவர்களே, இந்த உடைப்பு ஏற்பட்டதற்கு முக்கிய காரணம் பக்கத்தில் இருக்கிற இடத்தில் விவசாயிகள் நெல் பயிரிடுவதால் அங்கே அந்தத் தண்ணீர் தேங்கி அந்த உடைப்பு ஏற்படுகிறது. ரோட் டாம் சரியாக செயல்படவில்லை. ஆகவே, பக்கத்தில் இருக்கும் நிலங்களில் உள்ளவர்களை அப்புறப்படுத்தினால் அந்த மாதிரி உடைப்பு ஏற்படாது. அதை அமைச்சர் அவர்கள் செய்வார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு உறுப்பினரின் யோசனை கருத்தில் கொண்டு சரி செய்யப்படும்.

(ஐ) மணிமுத்தாறு நீர்ப்பிடிப் பகுதிகளில் மழை பொய்த்து விட்டமை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்: தலைவரவர்களே, ''அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள மாஞ்சோலை எஸ்டேட் பக்கமுள்ள காடுகளில் மரம் வெட்டப்பட்டு வருவதால் மணிமுத்தாறு நீர்ப்பிடிப் பகுதிகளில் போதிய மழை இல்லாததால் விவசாயிகளிடையே எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து'' என்ற அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: 1929-ம் ஆண்டு நெல்லை மாவட்டத்தில் முன்னாள் சிங்கம்பட்டி ஜமீனைச் சேர்ந்த சுமார் 3388 ஹெக்டேர் காடுகள் பம்பாய் பர்மா ட்ரேடிங் கார்ப்பொரேஷன் (B.B.T.C.) என்ற நிறுவனத்திற்கு ஜமீன்தாரால் 99 வருட குத்தகைக்கு கொடுக்கப்பட்டன. இந்தக் குத்தகையின் நிபந்தனைகளின்படி ''மேற்படி குத்தகைக்கு விடப்பட்ட காடுகளில், காபி, டீ, கோகோ, சின்கோனா, ஏலக்காய், மிளகு, ரப்பர் முதலிய தோட்டப் பயிர்கள் வளர்க்கலாம் என்பதும், இதற்கான தேவையான அளவிற்கு மரங்களை வெட்டி விட்டு, கட்டிடங்களை எழுப்பவும் பாதைகளை அமைக்கவும் உரிமையளிக்கப்பட்டுள்ளது; ஆனால் வெட்டப்பட்ட மரங்களையும், புதர்களையும் தோட்டப்பயிர் வளர்ச்சி சம்பந்தமாக மட்டுமே உபயோகப்படுத்த வேண்டும், மீதியை எரித்து விட வேண்டும் என்பதும், வேறு யாருக்கும் விற்கவோ அல்லது பண்ட மாற்றாக கொடுக்கவோ கூடாது என்பதும் குறிப்பிடத்தக்க விதிகள் ஆகும்.

பிறகு, 1948ஆம் ஆண்டில் ஜமீன் ஒழிப்பு சட்டத்தின் அடிப்படையில் சிங்கம்பட்டி ஜமீன் காடுகளும் அரசுக்குச் சொந்தமாயின. அதன் காரணமாக 1958ஆம் ஆண்டு வருவாய் வாரியத்தால் (ரெவின்யூ போர்டால்) 1929ஆம் வருடத்திய குத்தகை ஒப்பந்தம் பரிசீலிக்கப்பட்டு இந்தக் குத்தகை தொடர்ந்து நீடிக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டதுடன்